செ.வெ.எண்: 46/மார்ச் நாள்: 19.03.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## பறக்கும்படை, நிலைத்த கண்காணிப்பு குழு வாகனங்களில் GPS கருவி

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட தேர்தல் தொடர்பு மையத்தில் இன்று (19.03.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் நன்னடத்தை விதிமீறல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ள பறக்கும்படை, நிலைத்த கண்காணிப்பு குழு வாகனங்களை GPS கருவி மூலம் கண்காணித்திடும் பணிகளை பார்வையிட்டார்.

இராமநாதபுரம் பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2019, தேர்தல் நன்னடத்தை விதிமீறல் தொடர்பாக கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பறக்கும் படை, ஒரு சட்டமன்ற தொகுதி மூன்று வீதம் மொத்தம் 12 குழுக்களும், நிலைத்த கண்காணிப்பு (Static Surveillance Team)-12 குழுக்களும் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதவிர, Video Surveillance Team-4 குழுக்களும் Video Viewing Team ஒரு குழுவும் Accounting Team ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒன்று வீதம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி பறக்கும்படை மற்றும் நிலைத்த கண்காணிப்புக்குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்திட ஏதுவாக GPS கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்கண்காணிப்பு குழுக்களின் செயல்பாடுகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட தேர்தல் தொடர்பு மையத்திலிருந்து நேரடியாக கண்காணிக்கப்படுகிறது. இக்கண்காணிப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், இன்றைய தினம் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், மாவட்ட தேர்தல் தகவல் மையம் (District Contact Centre) சென்று ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

மாவட்ட தேர்தல் தகவல் மையத்தில் இதுவரை 1155 அழைப்புகள் வரப்பெற்றுள்ளன. பொதுவாக வாக்காளர் அடையாள அட்டை தொடர்பாக அதிக அழைப்புகள் வரப்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**